முக்கிய வார்த்தைகள்:
*இதயம்*
*இரகசியப் பேச்சு / முணுமுணுப்பு*
*நன்மை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**18 செப்டம்பர் 2026 / 6 ரபீவுல் ஆகிர் ஹிஜிரி 1448**

## ஓரிறை நம்பிக்கையால் இதயத்தின் முணுமுணுப்பை வெல்வது

**إِنَّ الْحَمْدَ لِلّٰهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللّٰهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّٰهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيل: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற் றுங்கள். அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்குப் பரிபூரணமான ஆன்மீகத்தையும், ஆன்மாவின் உறுதியையும் வழங்குவானாக! அதன் மூலம் நாம் ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையில் உறுதியானவர்களாக ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

சில சமயங்களில், நமது **இதயங்களில்** சில கேள்விகள் எழுகின்றன; அதாவது, நாம் தொடர்ந்து நன்மை செய்து வருகிறோம்; ஆனால், பலர் அதற்கு நேர்மாறாகச் செயல்படுகின்றனர்; இந்நிலையில், நாம் தொடர்ந்து **நன்மை** செய்வதால் நமக்கு என்ன பலன்? **நன்மை செய்பவர்கள்** கடும் துன்பங்களால் சோதிக்கப்படும் போது, அடக்குமுறைகள் மற்றும் அநீதங்களைச் செய்பவர்கள் ஏன் தொடர்ந்து **சுகபோகமாக** வாழ்ந்து வருகிறார்கள்? எனும் கேள்விகள் எழுகின்றன.

இத்தகைய கேள்விகள், ஒரு ஓரிறை நம்பிக்கையாளரைப் பொருத்த வரை புதிதல்ல; அநீதியையும் அடக்குமுறையையும் காணும் போது, ஓரிறை நம்பிக்கையைக் கொண்டுள்ள **இதயம்** நிச்சயம் கலக்கமடையத்தான் செய்யும். எனினும், இக்கேள்விகள் ஓரிறை நம்பிக்கையின் வழிகாட்டுதல் இல்லாமல் விடப்பட்டால், அவை நமது ஆன்மாவைப் பலவீனப்படுத்தி விடும். இறுதியில், **நன்மை** செய்வதற்கான முயற்சிக்கு இனி எந்த அர்த்தமும் இல்லை என்று நாம் உணரத் தொடங்கி விடுவோம்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

இதயத்தில் ஏற்படும் இந்த **முணுமுணுப்புகள்**, இரகசியப் பேச்சுகள் வலுப் பெறும் போது, திருக்குர்ஆனின் "கா.ஃப்" எனும் அத்தியாயத்தின் 16-வது வசனத்தில் காணப்படும், பின்வரும் அல்லாஹ்வின் வார்த்தைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

وَلَقَدْ خَلَقْنَا ٱلْإِنسَـٰنَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهِۦ نَفْسُهُۥ ۖ وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ ٱلْوَرِيدِ ﴿١٦﴾

பொருள்: *"மேலும் நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம், அவன் மனம் அவனிடம்* ***என்ன பேசுகிறது*** *என்பதையும் நாம் அறிவோம்; அன்றியும், [அவனது] பிடரி [யிலுள்ள உயிர்] நரம்பை விட நாம் அவனுக்குச் சமீபமாகவே இருக்கின்றோம்"*

சகோதரர்களே! இதை உறுதியாக நம்புங்கள்; சத்தமாகப் பேசப்படாத **முணுமுணுப்புகள்** உட்பட, எதுவும் அல்லாஹ்வின் அறிவிலிருந்து மறைக்கப்படுவதில்லை. நாம் அனுபவிக்கும் அனுபவங்களைப் புரிந்து கொள்ள மட்டுமே நம்மால் முயற்சிக்க முடியும்; ஆனால் **உள்ளத்தில்** மறைந்திருக்கும் ஒவ்வொரு கலக்கத்தையும், அமைதியின்மையையும் முறையீடுகளையும் அல்லாஹ் முழுமையாக அறிகின்றான்.

அதே சமயம், நாம் நமது கண்களுக்கு முன்னால் இருப்பதை மட்டுமே காண்கிறோம்; ஆனால் அல்லாஹ்வின் ஞானமோ, கடந்து சென்றவை, தற்போது நடப்பவை மற்றும் இனி வரவிருப்பவை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும். ஒரு குறிப்பிட்ட சோதனையையோ அல்லது அநீதியையோ அல்லாஹ் ஏன் நடக்க அனுமதிக்கின்றான் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கலாம்; ஆனால் எந்தத் தீமையும் அவனது அறிவிலிருந்தும் அவனது நீதியிலிருந்தும் தப்புவதில்லை என்பதை உறுதியாக நம்புங்கள். மேலும் எந்த **நற்செயலும்** அவனது பார்வையில் அர்த்தமற்றதாகக் கருதப்படுவதில்லை.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ் நமக்கு மிகவும் அருகில் இருக்கின்றான் என்ற அறிவும் நம்பிக்கையும் நமது வாழ்க்கையில் என்ன தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என நாம் சிந்திக்க வேண்டும். நாம் வெறுமனே, “அல்லாஹ் அறிந்தவன்” என்று கூறி விட்டு, மௌனமாக இருப்பது போதுமானதா? என்றால் நிச்சயமாக இல்லை.

நம்மால் ஒரு நேர்மறையான, உடன்பாடான மாற்றத்தைக் கொண்டு வர முடியுமென்றால், அந்த நன்மையை அடைய நாம் பாடுபட வேண்டும்; நம்மால் ஒருவருக்கு உதவ முடிந்தால், அந்த உதவியை நாம் செய்ய வேண்டும்; நாம் அநீதியை எதிர்கொள்ளும் போது, அந்த அநீதி நமது சிறந்த குணத்தையும் கொள்கைகளையும் கெடுக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

பொறுமை என்பதன் உண்மையானப் பொருள் இதுவாகும்; அதாவது, பொறுமை என்பது அநீதியைக் காணும் போது மௌனமாக இருப்பதல்ல; மாறாக, நாம் சரியானதைத் தொடர்ந்து செய்வதும், நம்மால் மேம்படுத்த முடிந்தவற்றை மேம்படுத்துவதும் அவசியமாகும். நமது திறனுக்கு அப்பாற்பட்டதை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுவதும் அவசியமாகும்; இதுதான், பொறுமையின் உண்மையானப் பொருள் ஆகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஹூத்" எனும் அத்தியாயத்தின் 115-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَٱصۡبِرۡ فَإِنَّ ٱللَّهَ لَا يُضِيعُ أَجۡرَ ٱلۡمُحۡسِنِينَ ﴿١١٥﴾

பொருள்: *"[நபியே! எந்நிலையிலும்] பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் **சிறந்த செயல்கள்** செய்வோரின் நற்கூலியை வீணாக்கி விடமாட்டான்"*

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
ஒரு **நற்செயலின்** மதிப்பை, இன்று நம்மைச் சுற்றி நாம் காணுகின்ற அதன் விளைவுகளை மட்டும் கொண்டு அளவிட வேண்டாம்; நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் சரியானதைத் தொடர்ந்து செய்வதே நமது பொறுப்பாகும்.

நம்மால் மாற்ற முடிந்ததை மாற்றுவதற்குப் பாடுபடுவோமாக! நம்மால் உதவ முடிந்ததற்கு நமது உதவிகளை வழங்குவோமாக! மேலும் நமது திறனுக்கு அப்பாற்பட்டதை, நம்பிக்கையை இழக்காமலும் **நன்மைகள்** செய்வதை நிறுத்தாமலும் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்து அவனிடமே ஒப்படைத்து விடுவோமாக!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது **உள்ளங்களில்** அமைதியை ஏற்படுத்தி, எல்லாச் சூழ்நிலைகளிலும் **நன்மை** செய்வதில் உறுதியாக

நிலைத்திருக்கும் ஓரிறை நம்பிக்கையாளர்களாக நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.